# 2023-24 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு

**திரு தங்கம் தென்னரசு**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள

மேலாண்மைத் துறை அமைச்சர்

அக்டோபர், 2023

புரட்டாசி, திருவள்ளுவர் ஆண்டு - 2054

## 2023-2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம்-2003 (சட்டம் எண்.16 / 2003), தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 6(2)-ஆனது, நிதித்துறைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர், அரையாண்டிற்கு ஒரு முறை வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்டவாறு வருவாய் மற்றும் செலவினம் உள்ளதா என ஆய்வுசெய்து, வரவினம் மற்றும் செலவினத்தில் உள்ள தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் படியான குறியீடுகளை எய்துவதற்கு தீர்வு முறைகளைக் கண்டறிந்து, அந்த ஆய்வுமுடிவுகளை சட்டமன்றப்

பேரவையின் முன்பு வைக்க வேண்டும் என தெரிவிக்கிறது.

இச்சட்டத்தின் பிரிவு 6 (3)-ஆனது ஆய்வின் முடிவை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கும் பொழுது, பின்வருவனவற்றை விளக்கும் விவர அறிக்கை ஒன்றை அமைச்சர் சமர்ப்பிக்கவேண்டும் என தெரிவிக்கிறது:-

(அ) இச்சட்டத்தின் படி மாநில அரசுக்கு உள்ள பொறுப்புகள் (Obligations) நிறைவேற்றப்படுவதில் காணப்படும் மாறுபாடுகள் (Deviations);

(ஆ) அத்தகைய மாறுபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையா, மற்றும் அவை உள்ளபடியேயான அல்லது எய்தப்படவேண்டிய வரவு-செலவுத்

திட்ட இலக்குகளை ஒட்டி உள்ளனவா என்பன பற்றிய விவரங்கள்; மற்றும்

(இ) மாநில அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் தீர்வு நடவடிக்கைகள் (Remedial measures)

இச்சட்டப் பிரிவுகளுக்கு இணங்க 2023-24 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த ஏப்ரல் முதல் ஆகஸ்ட் 2023 வரையிலான ஐந்து மாதகாலத்திற்கான ஆய்வினை 2023 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாளன்று மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின் முடிவு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகின்றது.

<u>வருவாய் வரவுகளின் ஆய்வு</u>:

அரசின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்:

அ) மாநிலத்தின் சொந்தவரி வருவாய்

ஆ) மாநிலத்தின் சொந்தவரி அல்லாத வருவாய்

இ) ஒன்றிய வரிகளில் தமிழ்நாட்டிற்குப் பகிர்ந்தளிக்கப்படும் தொகை

ஈ) ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்

ஒன்றிய அரசின் உதவிமானியங்கள் மற்றும் ஒன்றிய வரிகளில் மாநில அரசின் பங்கு உட்பட 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் வரவுகள்

ரூ.2,70,515 கோடியாகும். 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையிலான வசூலிக்கப்பட்டுள்ள மொத்த வருவாய் வரவுகள் ரூ.92,967 கோடி ஆகும். இது வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட வருவாய் வரவுகளில் 34.37 சதவீதமாகவும் மற்றும் கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட வருவாய் வரவுகளைக் காட்டிலும் 1.26 சதவீதம் கூடுதலாகவும் உள்ளது. மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் குறித்த ஒப்பீட்டு விவரம் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## 2023-2024 ஆம் நிதியாண்டின் முதல் ஐந்து மாதத்திற்கான தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகளின் போக்கு

| வருவாய் வரவுகள் | 2022-2023 உத்தேசக் கணக்குகள் | 2023-2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | ஆகஸ்ட் 2022 வரையிலான கணக்குகள் | ஆகஸ்ட் 2023 வரையில் பெறப்பட்ட வருவாய் | 2022-2023 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2023-2024 ஆம் ஆண்டில் வளர்ச்சி வீதம் (ஆகஸ்ட் வரை) | 2023-2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 1,50,223 | 1,81,182 | 59,756 | 63,212 | 5.78 | 34.89 |
| மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் | 17,061 | 20,223 | 4,766 | 5,054 | 6.04 | 24.99 |
| ஒன்றிய வரிகளில் பங்கு | 38,731 | 41,665 | 12,962 | 15,601 | 20.36 | 37.45 |
| ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் | 37,734 | 27,445 | 14,328 | 9,100 | -36.49 | 33.16 |
| **மொத்தம்** | **2,43,749** | **2,70,515** | **91,812** | **92,967** | **1.26** | **34.37** |

**<u>(அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய்:</u>**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையிலான முதல் ஐந்து மாதங்களில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூ.63,212 கோடியாகும். இது 2023-24 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 34.89 சதவீதமாகும். முந்தைய ஆண்டின் அதாவது 2022-23 ஆம் நிதியாண்டில் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட வருவாயோடு ஒப்பிடும்போது இது 5.78 சதவீதம் உயர்ந்துள்ளதைக் காட்டுகிறது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஐந்து மாதகாலத்திற்கான மாநிலத்தின் சொந்த வரி வருவாய்ப் போக்கின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாநில வரிகள் | 2022-2023 உத்தேசக் கணக்குகள் | 2023-2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | ஆகஸ்ட் 2022 வரையிலான கணக்குகள் | ஆகஸ்ட் 2023 வரையில் பெறப்பட்ட வருவாய் | 2022-2023 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2023-2024 ஆம் ஆண்டின் வளர்ச்சி வீதம் (ஆகஸ்ட் வரை) | 2023-2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| வணிக வரிகள் | 1,12,962 | 1,32,813 | 44,983 | 47,696 | 6.03 | 35.91 |
| மாநில ஆயத் தீர்வைகள் | 10,423 | 11,819 | 4,368 | 4,357 | -0.27 | 36.86 |
| முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்கள் | 17,560 | 25,567 | 7,058 | 7,453 | 5.60 | 29.15 |
| வாகனங்கள் மீதான வரிகள் | 7,513 | 8,783 | 3,188 | 3,553 | 11.45 | 40.45 |
| ஏனையவை | 1,765 | 2,200 | 159 | 153 | -3.90 | 6.96 |
| **மொத்தம்** | **1,50,223** | **1,81,182** | **59,756** | **63,212** | **5.78** | **34.89** |

மாநிலத்தின் சொந்த வரி வருவாய் கணிக்கப்பட்ட வளர்ச்சியான 20.61 சதவீதத்திற்கு மாறாக 5.78 சதவீதம் அளவிற்கு வளர்ந்துள்ளது. வரி விகிதங்களைச் சீரமைத்தல், வரி வசூல் திறனை மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் வரி ஏய்ப்புகளைத் தடுத்தல் ஆகியவற்றின் வாயிலாக வரிவசூலை அதிகரிப்பதற்கு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அரசின் தொடர் முயற்சியின் விளைவாக ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியானது முறையே 10.16 மற்றும் 13.78 சதவீதத்தை எட்டியுள்ளது. வருவாய் வரவுகளின் இந்தப் போக்கு தொடரும் என்றும், மீதமுள்ள நிதியாண்டில் மேலும் மேம்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**<u>(ஆ) மாநிலத்தின் சொந்தவரி அல்லாத வருவாய்:</u>**

2023-24 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ரூ.20,223 கோடியில், 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை பெறப்பட்டுள்ள மாநிலத்தின் சொந்தவரி அல்லாத வருவாய் ரூ.5,054 கோடியாகும். முந்தைய ஆண்டில் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட ரூ.4,766 கோடி வருவாயைக் காட்டிலும் 6.04 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளதை இது எடுத்துக் காட்டுகிறது. இது, 2023-24 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 24.99 சதவீதமாகவும் உள்ளது. அரசு காலமுறை மதிப்பாய்வுகளை மேற்கொள்வதுடன், கட்டணத் திருத்தம் மற்றும் உரிமைக் கட்டணம், அபராதம் போன்ற வரி அல்லாத நிதி ஆதாரங்களில் இருந்து வருவாய் வரவுகளை அதிகரிக்க மேம்பட்ட

தொழில்நுட்ப நடவடிக்கைகளைப் பயன்படுத்துதல் போன்ற தேவையான நடிவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும், வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களில் வைக்கப்பட்டுள்ள பயன்படுத்தப்படாத அரசு நிதியை திரட்ட அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் காரணமாக, மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாயானது வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டளவுகளை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(இ) மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு**:

பதினைந்தாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, மத்திய வரிகளில் மாநில

அரசுகளுக்கான நிதிப்பகிர்வில் தமிழ்நாட்டிற்கான பங்கு 2022-23 ஆம் ஆண்டில் 4.079 சதவீதமாகும். அதன்படி, 2023-24 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், ஒன்றிய அரசிடமிருந்து ரூ.41,665 கோடி பெறப்படும் என மதிப்பிடு செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 2023 வரை ரூ.15,601 கோடி பெறப்பட்டுள்ளது. இது 2023-24 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 37.45 சதவீதம் ஆகும். ஆகஸ்ட் 2023 வரை பெறப்பட்டுள்ள வருவாய் முந்தைய ஆண்டில் இதே காலக்கட்டத்தில் பெறப்பட்ட வருவாயை காட்டிலும் 20.36 சதவீதம் வளர்ச்சியைக் காட்டுகிறது.

**(ஈ) ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்**:

2023-24 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒன்றிய அரசின் நிதியுதவி திட்டங்கள் உட்பட ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ரூ.27,445 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. 30.06.2022 அன்று வரை சரக்குகள் மற்றும் சேவை வரிக்கான இழப்பீட்டு முறை முடிவடைந்ததன் காரணமாக இது முந்தைய ஆண்டில் பெறப்பட்ட மானியங்களை விட 27.27 சதவீதம் குறைவாகும்.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்ட மொத்த உதவி மானியங்கள் ரூ.9,100 கோடியாகும். இது 2023-24 ல் மதிப்பிடப்பட்ட வரவுகளில் 33.16 சதவீதமாகும். 2023 ஆம் ஆண்டு

ஆகஸ்ட் வரை பெறப்பட்டுள்ள வருவாய் முந்தைய ஆண்டில் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட ரூ.14,328 கோடியைக் காட்டிலும் 36.49 சதவீதம் குறைந்துள்ளது. 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை சரக்குகள் மற்றும் சேவை வரிகள் இழப்பீடாக ரூ.3,533 கோடி அரசால் பெறப்பட்டுள்ளது. இதை ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்தில் சரக்குகள் மற்றும் சேவை வரிகள் இழப்பீடாக ரூ.9,602 கோடி பெறப்பட்டுள்ளது. ஆனால் சரக்குகள் மற்றும் சேவை வரிகள் இழப்பீட்டில் உள்ள வேறுபாட்டிற்காக ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்ட மானியங்கள் முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் பெறப்பட்டதைவிட 17.81 சதவீதம் அதிகம். ஒன்றிய அரசிடமிருந்து நிலுவைத் தொகை

மற்றும் நடப்பாண்டு மானியத் தொகையைப் பெற அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**<u>செலவினங்கள் குறித்த ஆய்வு</u>**

**<u>(அ) வருவாய்க் கணக்கு செலவினம்</u>**

2023-24 ஆம் நிதியாண்டிற்கான (வரவு செலவுத் திட்டத்தில்) வருவாய்க் கணக்கு செலவினங்கள் ரூ.3,08,056 கோடி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையிலான வருவாய்க் கணக்கு செலவினம் ரூ.1,10,582 கோடியாகும். இது, வருவாய்க் கணக்கு செலவினங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டில் 35.90 சதவீதமாகும். முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்பட்ட வருவாய்க் கணக்கு செலவினம் ரூ.97,001 கோடி.

ஒன்றிய அரசிடமிருந்து உதவி மானியங்கள் அதிகம் பெறப்பட்டுள்ளதால், ஒன்றிய அரசின் நிதி உதவி பெறும் திட்டங்களில் ஒன்றிய மற்றும் மாநில அரசின் பங்குகளை விடுவிப்பதும் அதிகரித்துள்ளதால் வருவாய்க் கணக்குச் செலவினம் கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தைக் காட்டிலும் 14.00 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஐந்து மாதங்களில் வருவாய் செலவினங்களின் போக்குகளின் சுருக்கம் பின்வருமாறு:

| வருவாய் செலவினங்கள் | 2022-2023 உத்தேசக் கணக்குகள் | 2023-2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | ஆகஸ்ட் 2022 வரையிலான கணக்குகள் | ஆகஸ்ட் 2023 வரையிலான செலவினம் | 2022-2023 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2023-2024 ஆம் ஆண்டில் வளர்ச்சி வீதம் (ஆகஸ்ட் வரை) | 2023-2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| சம்பளங்கள் (கல்விக்கான அரசின் மானிய உதவி உட்பட) | 68,588 | 77,240 | 31,331 | 33,683 | 7.51 | 43.61 |
| ஓய்வூதியங்களும், ஓய்வுகாலப் பலன்களும் | 28,467 | 36,973 | 13,585 | 16,421 | 20.87 | 44.41 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும், பராமரிப்புகளும் | 14,715 | 16,273 | 3,698 | 4,381 | 18.46 | 26.92 |
| உதவித் தொகைகளும், நிதி மாற்றங்களும் | 1,20,476 | 1,22,088 | 32,715 | 38,164 | 16.65 | 31.26 |
| வட்டி செலுத்துதல் | 47,689 | 55,432 | 15,670 | 17,930 | 14.43 | 32.35 |
| ஏனையவை | 29 | 50 | 2 | 3 | 50.00 | 6.00 |
| **மொத்தம்** | **2,79,964** | **3,08,056** | **97,001** | **1,10,582** | **14.00** | **35.90** |

வளர்ச்சி செலவினங்களைத் தவிர இதர செலவினங்களைக் குறைப்பதற்கும், தேவையான நேரத்தில் (Just-in-time) நிதியை விடுவிப்பதை உறுதி செய்வதன் மூலம் செலவினங்களில் செயல்திறனைக் கொண்டு வருவதற்கும் அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சிகள் மூலம், 2023-24 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்ட அளவிற்குள் வருவாய் செலவினங்களை அரசு நிர்வகிக்கும்.

(ஆ) **மூலதனச் செலவினம்**

2023-24 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், மூலதனச் செலவினத்திற்காக ரூ.44,366 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை ரூ.9,955 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது, மூலதனக்

கணக்கு செலவினங்களுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 22.44 சதவீதமாகும். முந்தைய ஆண்டின் இதே காலக்கட்டத்தில் ஏற்பட்ட மூலதனக் கணக்கு செலவினம் ரூ.10,747 கோடியாகும். 2023-24 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதத்திற்கான மூலதனக் கணக்கு செலவினம் கடந்த ஆண்டில் இதே காலக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடும்போது 7.37 சதவீதம் குறைந்துள்ளது. அரசின் தொடர் முயற்சியால் திட்டங்களை செயல்படுத்தும் முகமைகளிடம் உபரி நிதி பயன்படுத்தப்படாமல் இருக்காத வகையில், தேவையான நேரத்தில் (Just-in-time) நிதி விடுவிக்கப்படுவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இச்செலவினம் மாநிலத்தில் நிகழ் மூலதனச் செலவினத்தைப் பிரதிபலிக்கிறது. மூலதனப் பணிகளை மேற்கொள்வதில் உள்ள

முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கான கருவி என்பதால் மூலதனப் பணிகளின் முன்னேற்றத்தை அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

## ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்

2023-24ல் திருத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படி, மாநில அரசு 2025-26 ஆண்டிற்குள் வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதோடு நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பீல் 3 சதவீதத்திற்குள் மிகாதவாறு பராமரிக்க வேண்டும்.

2022-23 ஆம் ஆண்டு உத்தேசக் கணக்குகளின்படி மதிப்பிடப்பட்ட ரூ.30,476 கோடிக்கு எதிரான வருவாய்ப் பற்றாக்குறை ரூ.36,215 கோடியாகும்.

இந்த ஆண்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கான செலவுகளை கணக்கில் கொண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.37,540 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை வருவாய்ப் பற்றாக்குறை ரூ.17,615 கோடியாக உள்ளது. இதை ஒப்பிடும் போது கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் வருவாய்ப் பற்றாக்குறை ரூ.5,189 கோடியாக இருந்தது. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் வருவாய் ஈட்டுதல் மிதமானதாக இருந்தாலும், வரவு மற்றும் செலவினம் ஆகிய இரண்டிலும் மேற்கொண்ட அனைத்து சீர்த்திருத்தங்கள் காரணமாக வரவு-செலவுத் திட்ட

வரம்பிற்குள் வருவாய்ப் பற்றாக்குறையை நிர்வகிக்க அரசு முயற்சிக்கும்.

பதினைந்தாவது நிதிக்குழுவானது 2023-24 ஆம் ஆண்டிற்கு கடன் பெறுவதற்கான சாதாரண வரம்பினை (Normal Borrowing Ceiling) மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3.00 சதவீத அளவாகவும், மின்துறை சீர்திருத்தங்களை மேற்கொண்டால் 0.50 சதவீத கூடுதல் அளவும் பரிந்துரைத்துள்ளது. 2023-24 ஆம் ஆண்டில் கடன் திரட்டுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட வரம்பு மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3.25 சதவீதம் ஆகும். இதில் மின்துறை சீர்திருத்த செயல்திறனைப் பொறுத்து வழங்கப்படும் 0.25 சதவீதமும் உள்ளடங்கும்.

கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுதல் மற்றும் நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மூலம்,

வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட நிதிப் பற்றாக்குறை மற்றும் கடனுக்கான வரம்பிற்குள் கட்டுப்படுத்த அரசு முனைந்து வருகின்றது. மேலும், திறன்மிக்க நடவடிக்கையின் மூலம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு இலக்கினை விட பற்றாக்குறையினைக் குறைக்க அரசு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது.

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதற்குப் பின்னர் ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகளின் நிலவரம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் ஐந்து மாதங்களுக்கான நிதிநிலைக் குறியீடுகள் பின்வருமாறு:

# நடப்பு ஆண்டின் நிதிநிலைக் குறியீடுகள்

| நிதிநிலைக் குறியீடுகள் | 2023-2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் | 2023 ஆகஸ்ட் மாதம் வரை |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| மொத்த வருவாய் வரவுகள் | 2,70,515 | 92,967 |
| வருவாய் செலவினம் | 3,08,056 | 1,10,582 |
| வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) | -37,540 | -17,615 |
| மொத்த மூலதனச் செலவினம் (நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் உட்பட) | 54,534 | 15,531 |
| மொத்தச் செலவினம் | 3,62,590 | 1,26,113 |
| நிதிப் பற்றாக்குறை | -92,075 | -33,143 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பீடு | 28,32,680 | 28,32,680 |
| | (%) | |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (இலக்கு) | --- | --- |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (உள்ளபடி) | -13.88 | -18.95 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (இலக்கு) | <3.50 | |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (உள்ளபடி) | -3.25 | -1.17 |

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் (திருத்தப்பட்டவாறு) கூறப்பட்டுள்ள இலக்குகளுக்கு ஏற்ப, மாநிலத்தின் நிதிநிலையை நிருவகிக்கும் பொருட்டு, நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டம் ஒன்றை நிதிநிலை அறிக்கையுடன் அரசு தாக்கல் செய்து வருகிறது.

2023-24 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த இந்த ஆய்வு, மாநிலத்தின் உண்மையான நிதிநிலையை எடுத்துரைப்பதுடன், நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டத்தில் வரவினம்-செலவினம் இடையேயான இடைவெளி ஏதேனும் இருப்பின், அவற்றைச் சரி செய்ய மாநில அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.

*********

# பின்னிணைப்பு

## ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்

| விவரங்கள் | வருவாய் உபரி / பற்றாக்குறை | | | நிதிப் பற்றாக்குறை | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் வரவுகளில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் (%) (உள்ளபடி) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (உள்ளபடி) |
| 2003-2004 கணக்குகள் | -20.28 | -1565.24 | -6.60 | 4.01 | 5591.16 | 3.19 |
| 2004-2005 கணக்குகள் | -17.28 | -703.34 | -2.47 | 3.76 | 5569.76 | 2.54 |
| 2005-2006 கணக்குகள் | -14.28 | 1951.33 | 5.75 | 3.51 | 2250.61 | 0.87 |
| 2006-2007 கணக்குகள் | -11.28 | 2648.26 | 6.47 | 3.26 | 3956.00 | 1.27 |
| 2007-2008 கணக்குகள் | -8.28 | 4545.49 | 9.57 | 3.01 | 3685.59 | 1.05 |
| 2008-2009 கணக்குகள் | < -5.00 | 1452.25 | 2.64 | <3.00 | 8547.76 | 2.13 |
| 2009-2010 கணக்குகள் | ** | -3531.22 | -6.32 | <4.00 | 11807.26 | 2.46 |
| 2010-2011 கணக்குகள் | < -5.00 | -2728.69 | -3.89 | <4.00 | 16646.62 | 2.85 |
| 2011-2012 கணக்குகள் | 0 / உபரி | 1364.10 | 1.60 | <3.00 | 17274.08 | 2.30 |
| 2012-2013 கணக்குகள் | 0 / உபரி | 1760.27 | 1.78 | <3.00 | 16518.99 | 1.93 |
| 2013-2014 கணக்குகள் | < -5.00 | -1788.24 | -1.66 | <3.00 | 20583.49 | 2.12 |

| விவரங்கள் | வருவாய் உபரி / பற்றாக்குறை | | | நிதிப் பற்றாக்குறை | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் வரவுகளில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் (%) (உள்ளபடி) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (உள்ளபடி) |
| 2014-2015 கணக்குகள் | ** | -6407.56 | -5.23 | <3.00 | 27162.44 | 2.49 |
| 2015-2016 கணக்குகள் | ** | -11985.35 | -9.29 | <3.00 | 32627.56 | 2.69 |
| 2016-2017 கணக்குகள் | ** | -12964.13 | -9.24 | <3.00 | 56171.35 | 4.20 |
| 2017-2018 கணக்குகள் | ** | -21593.88 | -14.76 | <3.00 | 39839.51 | 2.76 |
| 2018-2019 கணக்குகள் | < -5.00 | -23459.45 | -13.50 | <3.00 | 47334.90 | 2.97 |
| 2019-2020 கணக்குகள் | ** | -35908.82 | -20.57 | <3.00 | 60178.64 | 3.24 |
| 2020-2021 கணக்குகள் | ** | -62325.88 | -35.80 | <5.00 | 87742.11 | 4.61 |
| 2021-2022 கணக்குகள் | ** | -46,538.03 | -22.43 | <4.50 | 73739.31 | 3.38 |
| 2022-2023 உத்தேசக் கணக்குகள் | ** | -36,215.14 | -14.86 | <4.00 | 81885.81 | 3.30 |
| 2023-2024 திட்ட மதிப்பீடு | ** | -37,540.44 | -13.88 | <3.50 | 92074.91 | 3.25 |

** இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை.